சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 02.03.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **102/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-13 |
| சாட்சியின் பெயர் | : | சிவஞானம் |
| தந்தை பெயர் | : | முருகையன் |
| கிராமம் | : | திருத்துறைப்பூண்டி |
| தாலுக்கா | : | திருத்துறைப்பூண்டி |
| தொழில் | : | மருத்துவர் |
| வயது | : | 70 |

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 02 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

2, 4 எதிரிகள் ஆஜர். 1, 5, 7 ம் எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது. அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்பொழுது தனியாக மருத்துவமனை வைத்து நடத்தி வருகிறேன். நான்

அரசு மருத்துவராக திருத்துறைப்பூண்டி அரசு மருததுவமனையில் மருத்துவராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். 30.06.2011ம் தேதியன்று முழு நேர பணியிலிருந்தபோது திருத்றைப்பூண்டி காவல் சரகம் பெரிய சிங்களாஞ்சேரியை சேர்ந்த தங்கவேல் என்பவருடைய மகன் **33 வயதுடைய அ.சா.4 ரவி** என்பவர் சிகிச்சைக்காக வந்தார். அவர் தன்னை அடையாளம் தெரிந்த 6 நபர்கள் கத்தி, லிவர், அரிவாள், கொடுவாள் ஆகியவைகளை கொண்டு 30.06.2011ம் தேதியன்று பிற்பகல் 03.30 மணியளவில் மன்னை சாலை, திருத்துறைப்பூண்டி காவல் நிலையம் எதிரில் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்தபோது, சுயநினைவுடன் காணப்பட்டார். அவருடைய நாடித்துடிப்பும், இரத்த கொதிப்பு சீராக இருந்தது. அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டன. 1 x1 செ.மீ அளவில் உள்ள சிராய்ப்பு காயம் வலது முழங்காலில் காணப்பட்டது. 1 x 1 செ.மீ அளவில் உள்ள சிராய்ப்பு காயம் வலது கை பெருவிரலில் காணப்பட்டது. கழுத்து பகுதி, முதுகு பகுதி ஆகியவற்றில் வலி இருப்பதாக கூறினார். அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அவருக்கு பதிவு செய்யப்பட்டுள்ள விபத்து பதிவேடு **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அவருக்கு இருந்த காயம் சாதாரண காயம் என தெரிய வந்ததால் அ.சா.ஆ.6 ல் இது குறித்து சான்றளித்துள்ளேன்.

2. அதேநாள், பணியிலிருந்தபோது, பிற்பகல் 04.00 மணி அளவில் திருத்துறைப்பூண்டி காவல் சரகம் மங்களாநாயகி புரத்தை சேர்ந்த முனுசாமி என்பவரின் மகன் 30 வயதுடைய அ.சா.1 **கார்த்திகேயன்** என்பவர் சிகிச்சை கோரி வந்தார். அவர் தன்னை அடையாளம் தெரிந்த 6 நபர்கள் அரிவாள், இரும்பு கம்பி, இரும்பு ராடு, சவுக்கை கட்டை கொண்டு 30.06.2011ம் தேதியன்று பிற்பகல் 03.30 மணியளவில் மன்னை சாலை, திருத்துறைப்பூண்டி காவல் நிலையம் எதிரில் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்தபோது, சுயநினைவுடன் காணப்பட்டார். அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டன. 5 x 1/2 x 1/2 செ.மீ அளவில் உள்ள

சிதைந்த காயம் இடது தலைப்பகுதியில் காணப்பட்டது. அவருடைய கண்ணில் வலி இருப்பதாக கூறினார். வலது கண்ணிலிருந்து நீர் வந்து கொண்டிருந்தது. வலது முன் கை, மேல் கை ஆகியவற்றில் வலி இருப்பதாக கூறினார். இடது விலாப்பகுதியில் வலி இருப்பதாக கூறினார். அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அந்த விபத்து பதிவேடு **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த விபத்து பதிவேட்டியேலயே அவருக்கு இருந்த காயம் சொற்ப காயம் என சான்றளித்துள்ளேன்.

3. அதேநாள், பணியிலிருந்தபோது, இரவு 10.00 மணி அளவில் பெரியசிங்களாந்தியை சேர்ந்த சிதம்பரம் என்பவருடைய மகன் 45 வயதுடைய **அ.சா.7 லெட்சுமணன்** என்பவர் சிகிச்சை கோரி வந்தார். அவர் தன்னை அடையாளம் தெரிந்த 5 நபர்கள் சவுக்கை கட்டை, சைக்கிள் செயின் கொண்டு 30.06.2011ம் தேதியன்று பிற்பகல் 03.30 மணியளவில் மன்னை சாலை, திருத்துறைப்பூண்டி காவல் நிலையம் எதிர்புறம் வைத்து தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்தபோது, சுயநினைவுடன் காணப்பட்டார். அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டன. 3 x 3 செ.மீ அளவில் உள்ள வீக்கம் இடது கண்ணிற்கு கீழ் காணப்பட்டது. தலைப்பகுதி, இடுப்பு பகுதி, முதுகு பகுதி ஆகிய பகுதிகளில் வலி இருப்பதாக கூறினார். அவர் மருத்துவரின் அறிவுரையின்றி தன்னிச்சையாக மருத்துவ மனையிலிருந்து சென்று விட்டதால் அவருக்கு காயசான்று வழங்க முடியவில்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1 கார்த்திகேயன், அ.சா.4 ரவி மற்றும் அ.சா.7 லெட்சுமணன் ஆகியோர்களுக்கு நான் பரிசோதித்த வகையில் வெட்டுக்காயங்கள் எதுவும் காணப்படவில்லை என்று சொன்னால் ஆமாம். இந்த நபர்கள் கார் போன்ற மிகப் பழமையான வாகனங்களில் பயணம் செய்யும்போது திடீரென அவசரகதியில் இறங்க முயற்சித்தால், இதுபோன்ற காயங்கள் ஏற்பட

வாய்ப்பு உள்ளதா? என்றால் சொரசொரப்பான பகுதிகளில் மோதியிருந்தால் சிராய்ப்பு காயங்களும், கூர்மையான பகுதிகளில் மோதியிருந்தால் கிழிந்த காயங்கள் ஏற்பட்டிருக்க வாய்ப்பு உள்ளது.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.03.02 15:50:06 +0530

அமர்வு நீதிபதி,

எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு

நீதிமன்றம், திருவாரூர்.